# க.பொ.த (உ/த)ப் பரீட்சை - 2013
## வணிகக் கல்வி I
**நேரம் : 2 மணித்தியாலம்**

01. பின்வரும் அட்டவணையானது வணிகத்தின் தொழிற்பாடுகளையும் அவற்றுடன் தொடர்புடைய கருத்தினையும் தருகின்றது

| | வணிகத் தொழிற்பாடுகள் | | தொழிற்பாட்டின் கருத்துக்கள் |
|---|---|---|---|
| 1 | உற்பத்தி | A | புத்தாக்கத்தினையும் தரத்தினையும் ஏற்படுத்துதல் |
| 2 | சந்தைப்படுத்தல் | B | நிறுவன செல்வத்தை உச்சப்படுத்தல் |
| 3 | நிதி | C | வளங்களுக்குப் பெறுமதி சேர்த்தல் |
| 4 | மனித வளம் | D | மனித தேவைகள் பூர்த்தி செய்வதற்கான ஆளணி |
| 5 | ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் | E | தனிநபர் அல்லது குழுக்களின் தேவை கருதி இன்னொருவர் மூலம் உற்பம் செய்து சுதந்திரமாகப் பரிமாற்றல் |

வணிகத் தொழிற்பாடுகளையும் அதற்குப் பொருத்தமான கருத்தையும் தரும் இணைப்பைத் தெரிக

1. 1C, 2E, 3B, 4D, 5A
2. 1C, 2E, 3D, 4B, 5A
3. 1C, 2E, 3B, 4A, 5D
4. 1C, 3B, 2E, 4A, 5D
5. 2C, 1E, 3B, 4D, 5A

02. தேவை, விருப்பம் தொடர்பான கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளது.

A - பொதுவானவை
B - சமூக சக்திகளினால் மாற்றக்கூடியது
C - வரையறுக்கப்பட்டவை
D - முதல்நிலைக்குரியவை
E - வரையறுக்கப்படாதவை
F - இரண்டாம் நிலைக்குரியவை

மேற்கூறியவற்றில் விருப்பம் தொடர்பான கருத்து

1. BEF  2. ABC  3. AEF  4. BCF  5. DEF

03. வணிகச் சூழல் விசைகள் சில கீழே தரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| A | உரிமையாளர் | B | ஊழியர்கள் |
| C | போட்டியாளர் | D | நிறுவனஅமைப்பு |
| E | பிரதியீட்டுப் பொருட்களை உற்பத்தி செய்வோர் | F | புதிதாக சந்தைக்குள் பிரவேசிக்கவுள்ள வணிகர்கள் |

அகச் சூழல் காரணிகளை மட்டும் கொண்ட தொகுதியைத் தெரிவு செய்க.

1. ACD  2. ABD  3. ABC  4. ABE  5. ABF

04. வணிகம் ஒன்றின் சமூகப் பொறுப்புக்கள் கீழே தரப்படுகின்றது.

A - கழிவுப்பொருள் முகாமைத்துவம்
B - நியாயமான உழைப்பை பெற்றுக்கொடுத்தல்
C - இழப்புக்கள் குறைத்தல்
D - தொழிற்பாதுகாப்பு
E - உரிமைகளைப் பாதுகாத்தல்
F - பசுமை உற்பத்திகள்
G - நியாயமாக இருத்தல்

ஊழியருடன் தொடர்புடைய சமூகப் பொறுப்பை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1. AEG 2. DEG 3. BDE 4. CEG 5. ACE

05. பின்வரும் அட்டவணையானது நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் கருவிகளும் அவற்றுடன் தொடர்புடைய கருத்துக்களும் கீழே தரப்படுகின்றது.

| | நாணயக் கொள்கை கருவிகள் | | தொடர்புடைய கருத்துக்கள் |
|---|---|---|---|
| 1 | கொள்கை வட்டிவீதம் | A | மத்திய வங்கியானது காசின் பிணைப் பத்திரங்கள் கொள்வனவு, விற்பனை செய்தல் |
| 2 | திறந்த சந்தை நடவடிக்கை | B | மத்திய வங்கி பயன்படுத்தும் வட்டிவீதம் |
| 3 | மீள் கொள்வனவு வீதம் | C | வணிக வங்கிகளினால் தமது வைப்புகளுக்கேற்ப மத்திய வங்கியில் பேணிச் செல்லவேண்டிய பணத்தின் அளவு |
| 4 | ஒதுக்குவீதம் | D | வணிக வங்கிகளும் முதல்நிலை வியாபாரிகளும் இவர்களில் மேலதிக நீதியினை மத்திய வங்கியிலுள்ள காசு பிணைப்பத்திரங்களில் முதலீடு செய்யும்போது செலுத்தப்படும் வட்டி வீதமாகும். |

1. 1D, 2A, 3C, 4B
2. 1D, 3A, 2C, 4B
3. 1B, 2A, 3D, 4C
4. 1A, 2B, 3C, 4D
5. 1A, 2B, 3D, 4C

06. பின்வரும் அட்டவணையானது காசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறையும், அவற்றுடன் தொடர்புடைய விடயங்களையும் தரப்படுகின்றது.

| | செல்வாக்குச் செலுத்தும் முறை | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|---|
| 1 | வாடிக்கையாளர் | A | போக்குவரத்து, நீர், மின்சார வசதி |
| 2 | ஊக்குவிப்பாளர் | B | வரிச்சலுகை, வரி விடுதலை |
| 3 | போட்டியாளர் | C | வணிகக் கருமங்களில் அரச நிறுவனங்கள் ஈடுபடல் |
| 4 | வரி அறவீட்டாளர் | D | அரசு தனது கருமங்களை நிறைவேற்ற பொருட்கள் சேவைகள் கொள்வனவு செய்தல் |
| 5 | உட்கட்டமைப்பு வசதி வழங்கல் | E | வருமானம் திரட்ட அரசு பல நிறுவனங்களை ஈடுபடுத்தியுள்ளது |

செல்வாக்குச் செலுத்தும் முறைக்கும், 2ம் முறையுடன் தொடர்புடைய விடயங்களுக்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

1. 1A, 2B, 3C, 4D, 5E
2. 1D, 2B, 3C, 4E, 5A
3. 1E, 2B, 3C, 4A, 5D
4. 1C, 2B, 3A, 4D, 5E
5. 1D, 2B, 3E, 4C, 5A

07. 2011ம் ஆண்டின் மத்திய வங்கியின் அறிக்கையின் படி தனிநபர் வருமான வரியை கணக்கின் போது வரியற்ற படிகள் வருமானம்

1. 300,000 2. 400,000 3. 500,000 4. 100,000 5. 80,000

08. தொகுதி அ பகுதியில் குறிப்பிட்ட விடயங்களுக்கு பொருத்தமான விடயத்தையும் தொகுதி ஆ பகுதியில் தெரிவு செய்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

| | தெரிவு அ | | தெரிவு ஆ |
|---|---|---|---|
| 1 | குறித்த நபர் அல்லது நிறுவனத்தால் தெலுத்தப்படும் மின்வரி | A | பாரிய வீதி அமைத்தல், பாலம் கட்டுதல் |
| 2 | செலுத்தப்பட்ட வரியினை இன்னொருவர் மீது சுமத்தக் கூடியதாகவிருத்தல் | B | தண்டப்பணம், முத்திரைக் கட்டணம் |
| 3 | அரசின் வரி அல்லாத வருமானங்கள் | C | நேர்வரி |
| 4 | நடைமுறைச் செலவு | D | நேரில் வரி |
| 5 | மூலதனச் செலவு | E | வட்டி செலுத்துகை |

1. 1A, 2B, 3C, 4E, 5C
2. 1C, 2A, 3E, 4D, 5B
3. 1C, 2D, 3B, 4E, 5A
4. 1D, 2C, 3A, 4C, 5D
5. 1A, 2E, 3C, 4D, 5B

09. தனி வியாபாரம் தொடர்பாக தவறான கூற்றைத் தெரிவு செய்க
1. 1918ம் ஆண்டு வியாபாரப் பெயர்ப்பதிவுக் கட்டளைச்சட்டம் பதிவு தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும்.
2. உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு
3. வணிகத்தை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் பிரதேசத்தில் பிரதேச செயலாளர் காரியாலயத்தில் விண்ணப்பம் செய்தல்.
4. வணிகத்தின் பெயரில் வரிக்கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதில்லையென்பதுடன் உரிமை யாளரின் பெயரில் வருமானவரி செலுத்தப்பட வேண்டும்.
5. வணிகத்திற்குச் சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்தானது இருத்தல்

10. பல்லூடகம் எனப்படுவது,
1. சலனப்படம் 2. சலனமற்றபடம் 3. ஒலி 4. எழுத்தாக்கம் 5. யாவும் சரி

11. பின்வரும் அட்டவணையானது சில வணிக நிறுவனங்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட காரணிகளையும் தருகின்றது.

| | வணிக நிறுவனங்கள் | | தொடர்புடைய காரணிகள் |
|---|---|---|---|
| 1 | தனி வியாபாரம் | A | தன்னையும் ஏனையோரையும் பிரதிநிதியாக அல்லது தலைவராக்குதல் |
| 2 | பங்குடமை | B | முகாமை தீர்மானம் எடுப்பது உரிமையாளர் ஆகும். |
| 3 | பொது வரையறுத்த கம்பனிகள் | C | தேவைகளும் எதிர்பார்ப்புக்களும் பொதுவாகக் காணப்படல் |
| 4 | அங்கீகார வாணிபம் | D | ஒப்பந்த அடிப்படையிலான வியாபாரம் |
| 5 | கூட்டுறவு | E | மனித வளங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்தப்படல் |

தனியார் துறை வணிக நிறுவனங்களும் அவற்றுடன் தொடர்புடைய காரணிகளும் சரியாகப் பொருந்துகின்ற இணைப்பைத் தெரிக.
1. 1A, 2B, 3C, 4D, 5E
2. 1B, 2A, 3E, 4D, 5C
3. 1B, 2A, 3D, 4E, 5C
4. 1A, 2B, 3E, 4D, 5C
5. 1B, 3A, 2E, 4D, 5C

12. முயற்சியாண்மை அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்தும் தேர்ச்சிகளிலும் தனிநபர் மற்றும் சூழல் காரணிகள் கீழே தரப்படுகின்றது.
1. அனுபவம்
2. முன்மாதிரிகள்
3. பிரச்சினைகளைத் தீர்த்தல்
4. தன்னம்பிக்கை
5. தலைமைத்துவம்
6. கல்வி
7. கண்காணித்தல்
8. முறையான திட்டமிடல்

மேலே குறிப்பிட்டவற்றுள் முயற்சியாண்மையின் தேர்ச்சியாகக் கருதப்படுவது
1. 2, 4, 5, 6
2. 3, 4, 7, 8
3. 3, 4, 5, 6
4. 1, 2, 3, 4
5. 4, 5, 6, 7

13. இலத்திரனியல் பணம் என்பது
1. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் தாள், குற்றி நாணயங்கள்
2. ATM அட்டைகள்
3. பௌதீகபணம் இலத்திரனியல் முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு கொடுக்கல் வாங்கல் செய்யும்போது அதன் பெறுமதி குறைவடைவது
4. ATM அட்டைகளும் கடன் அட்டைகளும்
5. ATM அட்டைகளும் , ……… அட்டைகளும்

14. பின்வரும் அட்டவணையில் X நிரலானது பிரதான நிதி நிரல்களையும் Y நிரலானது நிதிநிறுவனங்களுக்கான சில பெயர்கள் தரப்படுகின்றது

| | X | | Y |
|---|---|---|---|
| A | வங்கித்துறை | 1 | வியாபார வங்கி |
| B | வைப்புக்களை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள் | 2 | வணிக வங்கி |
| C | விசேட நிதி நிறுவனங்கள் | 3 | குத்தகைக் கம்பனிகள் |
| D | ஒப்பந்த சேமிப்பு | 4 | காப்புறுதிக் கம்பனிகள் |
| | | 5 | நிதிக் கம்பனிகள் |
| | | 6 | கூட்டுறவுக் கிராமிய வங்கி |
| | | 7 | இலங்கை வங்கி |
| | | 8 | ஊழியர் சேமலாபநிதி |

X மற்றும் Y தொடர்பான சரியான இணைவு

1. A12 /B57/ C14 / D38
2. A62 / B57 / C13 / D48
3. A27 / B56 / C13 / D48
4. A27 / B56 / C18 / D43
5. A27 / B43 / C15 / D68

15. முயற்சியாண்மை தொடர்பான இன்றைய நவீன போக்குகளாக அக முயற்சியாண்மை, சமூக முயற்சியாண்மை, பெண் முயற்சியாண்மை கருதப்படுகின்றது. கீழ்வரும் கூற்றுக்களுள் சமூக முயற்சியாண்மையாகக் கருதப்படுவது

A - அனுஷ்கா பெண்கள் அழகுக்கலை நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துள்ளார்.

B - Dr. ஜீவா வறிய மாணவர்களுக்கான இலவச வைத்தியசாலை ஒன்றை ஆரம் பித்துள்ளார்.

C - இலங்கை வர்த்தக வங்கி தனது முயற்சியாண்மையுடன் துணை நிறுவனமாக Commercial leasing கம்பனியை ஆரம்பித்தல்

D - சமூக ஆர்வலர் ரங்கன் சிறுவர்பராமரிப்பு நிலையம் ஒன்றை ஆரம்பித்து நடாத்துகின்றார்.

1. A, B    2. A, D    3. B, D    4. A,C    5. A,B

16. காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு அடிப்படை அம்சமாகக் கொள்ளப்படுவது
1. சட்ட ரீதியான தொடர்பொன்றை உருவாக்கிக்கொள்ளும் எண்ணம்
2. முன்மொழிவுகள்
3. ஏற்புடமை
4. சட்டரீதியான தன்மை
5. மேற்கூறிய அனைத்தும்

17. X நிரல் முகாமை தொடர்பான எண்ணக்கருக்களையும் Y நிரல் அவற்றுக்குப் பொருத்தமான கருத்தையும் காட்டுகின்றது.

| | X | | Y |
|---|---|---|---|
| A | பயனுறுதி Effechieness | 1 | உள்ளீட்டுக்கும் வெளியீட்டுக்குமான தொடர்பு |
| B | வினைத்திறன் Efficiency | 2 | செய்வதைச் சரியாகச் செய்தல் |
| C | உற்பத்தித்திறன் productivity | 3 | சரியானவற்றைச் செய்தல் |
| D | முகாமை செய்முறை Management process | 4 | உள்ளீடுகளை வெளியீடாக மாற்றுதல் |

X மற்றும் Y தொடர்பான சரியான இணைவு

1. A1 B2 C3 D4
2. A3 B2 C1 D4
3. A2 B3 C4 D1
4. A3 B2 D1 C4
5. A2 B3 C1 D4

18. தரக்கட்டுப்பாட்டின் முக்கியத்துவம்
1. பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தல்.
2. இலாபத்தினை அதிகரித்தல்.
3. போட்டிகளுக்கு இலகுவாக முகம் கொடுத்தல்
4. சட்ட நிலைமைக்கேற்ப செயற்படுதல்
5. மேற்கூறிய எல்லாம்

19. இலத்திரனியல் தகவல் முறைமையின் கூறு அல்லாதது

1. வன்பாகம் - Hardware
2. மென்பாகம் - software
3. உயிர்ப்பாகம் - Live ware
4. களஞ்சியப்படுத்தல் - storage
5. தரவு - input

20. பின்வரும் அட்டவணையில் X பகுதியில் சின்னங்களின் பல்வேறு வகைகளும் Y பகுதியில் அச் சின்னங்களுக்கான சிறப்புக்களும் எடுத்துக் காட்டப்படுகின்றது.

| | X | | Y |
|---|---|---|---|
| A | தேசிய சின்னம் National Brand | 1 | உற்பத்தி நிறுவனமொன்று ஒரு சின்னத்தின் கீழ் பொருட் தொகுதியொன்றை முன்வைத்தல் |
| B | தனிப்பட்ட சின்னம் Private Brand | 2 | நிறுவனமொன்று பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களுக்கு வெவ்வேறான சின்னங்களைப் பயன்படுத்தல் |
| C | குடும்ப சின்னம் Family Brand | 3 | உற்பத்தியாளரினால் உற்பத்திப் பொருட்கள் வியாபாரிக்கு விற்பனை செய்யப்பட்ட பின் அவ் வியாபாரிகள் உற்பத்திக்கு உருவாக்கும் குறி |
| D | பொருட் சின்னம் Product Brand | 4 | உற்பத்தியாளர் தனது உற்பத்தியினை தனிச் சின்னத்தின் கீழ் வியாபாரச் சந்தைக்கு முன்வைத்தல் |

X இற்கும் Yற்கும் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க

1. A1 B2 C3 D4
2. A5 B4 C2 D1 E3
3. A4 B3 C1 D2
4. A3 B4 C1 D2
5. A2 B3 C2 D1

21. புதிய நுகர்வோர் புராதன நுகர்வோர் போல் அல்லாது கூடுதலான சக்தியுடையவனாகக் காணப்படுவதற்கான காரணம்

1. கொள்வனவாற்றல் அதிகரித்துள்ளது
2. பல்வேறு வகையான பொருட்கள் சேவைகளும் மலிந்து காணப்படல்
3. எல்லா விடயங்கள் தொடர்பிலும் தகவல் பெருமளவில் காரணமாகியுள்ளது
4. கட்டளையிடவும் பெற்றுக்கொள்ளவும் மிகவும் இலகுவாகியுள்ளமை
5. மேற்கூறிய எல்லாம்

22. ஓரினத் தன்மை வாய்ந்த நுகர்வோரால் நுகரப்படுகின்ற பல்லினத் தன்மை வாய்ந்த பொருட்களிலிருந்து அதிக நுகர்வோரால் நுகரப்படும் பொருட்களைத் தேர்ந்தெடுத்து சந்தைப் படுத்தலை மேற்கொள்ளுதல்

1. செறிந்த சந்தைப்படுத்தல்
2. தொலை சந்தைப்படுத்தல்
3. நுண்பாக சந்தைப்படுத்தல்
4. இலக்கு சந்தைப்படுத்தல்
5. திரண்ட சந்தைப்படுத்தல்

23. மேற்படுத்தற் கலவையின் ஒரு கூறு

1. பொதியிடல்
2. நேர்ச்சந்தைப்படுத்தல்
3. சேவை சந்தைப்படுத்தல்
4. பண்டக் குறியிடல்
5. தொடர்புகொள்ளல்

24. வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சந்தைப்படுத்தல் தத்துவத்திற்கு வழங்கும் பெயர்

1. மையப்படுத்தல் மைய எண்ணக்கருக்கள்
2. உற்பத்தி எண்ணக்கரு
3. உற்பத்திப் பொருள் எண்ணக்கரு
4. விற்பனை எண்ணக்கரு
5. சந்தைப்படுத்தல் எண்ணக்கரு

25. பின்வருவனவற்றில் எது மூலதன சந்தையில் அங்கத்துவத்தினைக் கொண்டிராதது

1. பங்கு சந்தை
2. பங்குத் தரகர் சங்கம்
3. நம்பிக்கை அலகு நிதியங்கள்
4. பிணைகள் சந்தை
5. நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்களின் சந்தை

26. நடைமுறை விகிதம் எடுத்துக் காட்டுவது
   1. திரவத்தன்மை
   2. இலாபத்தன்மை
   3. மூலதன இணைவு
   4. நடவடிக்கையின் தன்மை
   5. சென்மதியாகவுள்ள செலவுகள்

27. கூலிகளை நிர்ணயிப்பதில் சாதாரணமாகக் கருத்தில் கொள்ளப்படக்கூடிய காரணிகளைக் கோடிடுக.
   1. வாழ்க்கைச் செலவு
   2. வேலை செய்யும் இடத்தின் தூரம்
   3. ஊழியரின் தங்கியிருப்போரின் எண்ணிக்கை
   4. பதவியுடன் தொடர்பான அபாயங்கள்
   5. ஊழியர் உடல் இயலாமை


28. மனித வள முகாமைத்துவத்தின் இலக்கு
   1. ஊழியர் உற்பத்தித்திறனை அதிகரித்தல்
   2. ஊழியர் அர்ப்பணிப்பை அதிகரித்தல்
   3. மனித வளத்துக்கான கிரயத்தைக் கட்டுப்படுத்தல்
   4. ஊழியர்களை ஊக்குவித்தல்
   5. பொருத்தமான ஊழியர்களைச் சேவையில் அமர்த்துதல்

29. எந்தவொரு வணிகத் திட்டத்தினதும் பிரதான பகுதிகளை உள்ளடக்கும் தொகுதியைத் தெரிவு செய்க
   1. வணிகத்துக்கான அறிமுகம் / செயற்பாட்டுத் திட்டம் / சந்தைப்படுத்தல் திட்டம் / நிதித்திட்டம்
   2. வணிகத்துக்கான அறிமுகம் / இலக்குச் சந்தை / செயற்பாட்டுத் திட்டம் / சந்தைப்படுத்தல் திட்டம் / நிதித் திட்டம்
   3. நிறுவகக் கட்டமைப்பு / செயற்பாட்டுத் திட்டம் / சந்தைப்படுத்தல் திட்டம் / நிதித்திட்டம்
   4. வணிகத்துக்கான அறிமுகம் / நிறுவகக் கட்டமைப்பு / மனித வளத் திட்டம் / நிதித் திட்டம்
   5. வணிகத்துக்கான வாய்ப்புகள் / நிறுவகக் கட்டமைப்பு / சந்தைப்படுத்தல் திட்டம் / நிதித்திட்டம்

30. திரவியங்கள், பொறி விருட்சமும் பொறித்தொகுதிகளும் என்பவற்றிற்கான தேவைப்பாடு வணிகத் திட்டத்தின் கிரயப் பகுப்பாய்வு என்பவை பின்வருவனவற்றுள் எதில் உள்ளடக்கப்படும்
   1. நிறைவேற்றுகைச் சுருக்கம்
   2. கம்பனி பற்றிய விவரணம்
   3. தொழிற்பாட்டுத் திட்டம்
   4. சந்தைப்படுத்தல் திட்டம்
   5. நிதித்திட்டம்

**31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடை எழுதுக.**


31.




32. ISO தலைமைகயம் ……………………………… நாட்டில் ………………………. நகரில் அமைந்துள்ளதுடன் இலங்கையில் ISO தரச் சான்றிதழ் நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக ………………………… காணப்படுகிறது.

33. தொழில் முயற்சிகளை அரசின் அதிகார வரம்பின் கீழ் அபிவிருத்தி செய்யவும் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள (2011) புதிய அரச அமைப்பு ……………………………………………… ஆகும்..

34. முகாமையாளர் கொண்டிருக்கவேண்டிய தகைமைகள்




35. பீற்றர் ட்றக்கர் (Peter Drucker) என்பவரது கருத்தான “சரியான கருமங்களை செய்தல்”…………………………………….. என அழைக்கப்படும்.

36. நோக்கங்களையும் அதனை அடைந்து கொள்வதற்கான வளங்கள், நடவடிக்கைகள் போன்றவற்றை கால ஒழுங்கில் காட்டும் ஆவணம் …………………………….. எனப்படும்.

37. முழுமைப்படைப்பு சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் (Holistic Marketing Concept) பிரதான மாறிகள்

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

38. நிதிச் சந்தையிலே கடன் கருவிகளில் முதலீடு செய்யவும் முதலீட்டாளர்களுக்கு அவற்றின் தர ரீதியான பண்புகளை சரியாக இனம் கண்டு முதலீடுகளைத் தெரிவு செய்வதற்கு வழிகாட்டுவது ……………………………………………

39. இலங்கையின் நாணயத் தாள்களை ………………………………… எனும் கம்பனியும் உலோக நாணயங்களை ……………………………….. என்ற கம்பனியும் வெளியீடு செய்கின்றது.

40. சுங்கத்திணைக்களத்திற்கு பண்டங்களை ஒப்படைத்த பின் அப் பண்டங்கள் பொறுப்பேற்கப்பட்டதை உறுதிப்படுத்தி ……………………………….. சுங்கத் திணைக்களத் தால் வழங்கப்படுகின்றது.

**41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.**

41. காசின் பொருளாதார நோக்கங்கள் நான்கு குறிப்பிடுக

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

42. நிறுவனமொன்றிற்கு பயன்படுத்த வேண்டிய வெளிவாரி ஆட்சேர்ப்பு முறைகள் நான்கு

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

43. முகாமைத்துவ செயற்பாட்டின் அடிப்படையில் தகவல் முறைமையின் வகைகள்

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

44. அங்கீகார வணிகத்தின் மூன்று பிரதான வகைகள்

(i) ……………………………….

(ii) ……………………… ………..

(iii) ……………………… ………….

45. போக்குவரத்தின் பிரதான மூலக்கூறுகள்

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

46. சர்வதேச வர்த்தக் கூட்டணிகள் (Trade Block)

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

47. வெளிநாட்டு வியாபாரத்தில் பணக் கொடுப்பனவை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள்

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

48. வணிகத்திட்டத்தில் உள்ளடங்கும் பிரதான அம்சங்கள் நான்கு குறிப்பிடுக.

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… ……. (iv) …………………………..

49. காசோலை ஒன்றுடன் தொடர்புடைய மூன்று பிரதான தரப்பினர்களைக் குறிப்பிடுக

(i) ………………………………. (ii) ……………………… ….

(iii) ……………………… …….

50. பிரதான உற்பத்தி முறைகள்

(i) ………………………………. ……………..

(ii) ……………………………………….. …….

(iii) ……………………………………………….

The National e-learning Portal for The General Education

**வணிகக் கல்வி** **வினாத்தாள் I** **விடைகள்**

| | | |
|---|---|---|
| 1 - 1 | 11 - 2 | 21 - 5 |
| 2 - 1 | 12 - 3 | 22 - 1 |
| 3 - 2 | 13 - 3 | 23 - 1 |
| 4 - 3 | 14 - 3 | 24 - 5 |
| 5 - 3 | 15 - 3 | 25 - 2 |
| 6 - 2 | 16 - 5 | 26 - 1 |
| 7 - 3 | 17 - 2 | 27 - 3 |
| 8 - 3 | 18 - 5 | 28 - 1 |
| 9 - 5 | 19 - 4 | 29 - 1 |
| 10 - | 20 - 3 | 30 - 3 |

31. அரச செலவு, வரியல்லாத வருமானம், நடைமுறைச் செலவு, நடைமுறைச்சொத்து
32. சுவிஸ்லாந்து, ஜெனீவா
33. அரச மூலகங்கள் முகாமைக் கூட்டுத்தாபனம்
34. திறன்

    தொ.திறன் நேரமுகாமைத்திறன்

    மனித நே.திறன் தொடர்பாடல் திறன்

    எண்.திறன்
35. பயனுறுதி / செயல்திறன்
36. திட்டம்
37. தொடர்பு சந்தைப்படுத்தல்

    தகவல் சந்தைப்படுத்தல்

    ஒருங்கிணைந்த சந்தைப்படுத்தல்

    சமூகபொறுப்பு சந்தைப்படுத்தல்
38. கடன் தரப்படுத்தல்
39. Thomas delarue

    Royal mint company
40. கப்பல் தளப் பத்திரம்
41. விலை உறுதி, நிறை தொழில் மட்டம், சமுகநிதி, வருமான ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்
42. ஊடக விளம்பரம், கல்வி தொழில்சார் நிறுவனம், தொழில் முகவர் நிலையம், இணையம்
43. உற்பத்தி, சந்தைப்படுத்தல், நிதி, ஆராய்ச்சி, அபிவிருத்தி
44. உற்பத்தி அங்கீகாரம், பொருளாதார அங்கீகாரம், வணிக முறையிலான அங்கீகாரம்
45. பாதை, ஊடகம், சக்தி, தரிப்பிடம்
46. EC, ASEHN, SAARC. NAFTA
47. வங்கியாணை, நாணயக்கடிதம், இலத்திரனியல் கொடுப்பனவு முறை, வெளிநாட்டு அஞ்சல்
48. வணிக விபரம், கட்டளைச் சுருக்கம், சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தித் திட்டம், நிதித்திட்டம், மனித வளத் திட்டம்
49. வரைபவர், வங்கி, பணம் பெறுபவர்
50. பாய்ச்சல் உற்பத்தி, தொகுதி உற்பத்தி, வேலை உற்பத்தி